1977 ஜூலை 12]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டையில் பாலக்குறிச்சி என்ற ஒரு ஊர் இருக்கிறது. தி.மு.க. அரசு இருந்த நேரத்தில் அந்த ஊரை இராமநாதபுரம் மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று தீவிரமாக இருந்தார்கள். திருச்சியிலிருந்த ஒரு அமைச்சர் இராமநாதபுரம் மாவட்டத்தோடு சேர்க்கக் கூடாது என்று தீவிரமாக இருந்தார். அப்படிப்பட்ட நிலையில், அதாவது ஸ்டேடஸ்கோ என்று சொல்லும்படியான, எந்தச் சார்புமற்ற நிலையில், புதுக்கோட்டையில் இருக்கிறதா, இராமநாதபுரத்தில் இருக்கிறதா என்று சந்தேகப்படும்படியான நிலையில் இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம், சிறிய, ஜனத் தொகைக் குறைவான மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டம் பெரிய மாவட்டம். எனவே, அந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தோடு தொடர்ந்து இருந்தால் அந்த ஊர் நன்மை பெறும். பெரிய வளர்ச்சி அடையாத மாவட்டத்தோடு சேர்ப்பது சரியல்ல. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவைப் பார்த்து பாலக்குறிச்சியை புதுக்கோட்டையோடு இணைக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹேஸ்டியாக அவசரமாக முடிவெடுக்காமல் நிதானமானப் போக்கை அனுசரித்து நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் போன்ற காரியங்கள் ஆளுநர் அவர்களுடைய உரையில் இடம் பெறுவதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(6) முதலமைச்சர் அறிவிப்பு.

திரு. காமராஜ் அவர்களின் உருவப் படத்தை சட்டப் பேரவையில் வைப்பது குறித்து.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த அவைக்கு ஒரு செய்தியை நான் சொல்ல வேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்வதிலே எல்லோரும் பங்கு கொள்வீர்கள், மகிழ்வீர்கள் என்பதிலே எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டு.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஜூலை 12

மறைந்த அமரர் பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய உருவப் படத்தினை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க வேண்டு மென்பதற்காக இப்போது நாடாளுமன்றத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு சஞ்சீவி ரெட்டி அவர்களுக்கு நான் கடிதம் எழுதி இருக்கிறேன். அவர் வந்து திறந்து வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விட்டு பதில் கிடைத்த பிறகு விரைவில் காமராஜ் அவர்களுடைய உருவப் படம் இங்கே திறந்து வைக்கப்படும் என் பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

திரு. டி. இராமசாமி: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய படத்தை இங்கே திறந்து வைப்பதாகத் தெரிவித்தமைக்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியிருக்கிறேன். இந்த மன்றத்தில் இப்போதாகிலும் இப்போது அமைந்துள்ள இந்த அரசு முன்வந்து இந்த நல்ல காரியத்தைச் செய்ய முன் வந்தமைக்காக ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவர் காமராஜ் அவர் களுடைய திருவுருவப் படத்தினை இங்கே திறப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரரும், நம்முடைய தமிழக முதல்வ ராக நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றியவருமான காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தினை திறப்பதற்கு முயற்சி எடுப்ப தற்கு எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஜூலை 12]

(திரு. நா. சுந்தரராஜ் பேசுவதற்கு எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பில் உங்கள் கட்சித் தலைவர் சொல்லிவிட்டார். ஒரு கட்சிக்கு ஒருவர் தான் பேச வேண்டும். ஆகவே தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி செலுத்திக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மறைந்த முதலமைச்சரும், பெருந் தலைவருமான பெருமைக்குரிய காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்திலே திறந்து வைப்பதற்கான ஏற்பாடு களை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சி யான தகவலை அறிவித்ததற்காக இந்த மன்றத்திலுள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சார்பிலும், எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, மறைந்த திரு. காமராஜ் அவர்கள் படத்தை இங்கே திறந்து வைப்பது சம்பந்தமாக எடுத்த முன் முயற்சிக்கும், திறந்து வைப்பதற்காக அழைத்திருக்கக்கூடிய இன்றைய சபாநாயகரும், நாளைய ஜனாதி பதியாக ஆகும்படியான வாய்ப்புள்ளவருமான சரியான நபரைத் தேர்ந்தெடுத்திருப்பதற்கும் உண்மையிலேயே மகிழ்ச்சி அடை கிறேன். மறைந்த காமராஜ் அவர்கள் எங்களுடைய கட்சித் தலைவர் தோழர் ராமமூர்த்தியினுடைய நெருங்கிய நண்பராகவும் இருந்திருக்கக் கூடியவர். ஆகவே, என்னுடைய கட்சியின் சார்பில் காமராஜ் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும்படி யான இந்த முயற்சியை வரவேற்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மறைந்த பெருந்தலைவர் காமராஜ் அவர் களுடைய படத்தை இங்கே திறந்து வைப்பதற்காக பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்பையும் நன்றியையும் தெரி வித்துக்கொள்கிறேன். அதோடு இங்கே முதலமைச்சராக இருந் தவரும், தேச சேவை செய்தவருமான பி. எஸ். குமாரசாமி ராஜா

போன்றவர்களுடைய படத்தையும் திறந்து வைத்தால் நலமாக இருக்குமென்ற கருத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. போ. கோபாலன்: மரியாதைக்குரிய அவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய நன்றியைத் தெரிவிக்கும் முன்பாக, இந்த மன்றத்தில் மறைந்த தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க முடிவு செய்ததற்காக தமிழக அரசுக்கும், முதலமைச்சர்—புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்திலே அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர்களாகிய நாங்கள் எங்களுடைய தொகுதிகளிலே மக்களைச் சந்தித்து எந்த அளவுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ அந்த வாக்குறுதிகளை எல்லாம் நல்ல முறையில் இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்பதற்கான நம்பிக்கையைத் தெரிவிப்பதாக இந்த ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது என்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்ற முறையில் இந்த அரசு அமைந்திருக்கிறது என்ற நம்பிக்கையையும் இந்த உரை அளித்திருக்கிறது.

1967-ஆம் ஆண்டுக்கு முன்னால், 10, 15 ஆண்டுகளாக, இந்தத் தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக வாலிபர்கள், தங்களுடைய இன்னுயிரை ஈந்து இனிய இல்லற வாழ்க்கையைத் துறந்து அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி மலர வேண்டுமென்ற நோக்கோடு பெரும் போராட்டங்களில் ஈடுபட்டு, சிறைச் சாலைகளை நிரப்பி, அந்த ஆட்சியைப் பெற்றுத் தந்தார்கள்.